**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**
**அசல் வழக்கு எண். 65/2025**

2026 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் நாள் வியாழன் கிழமை வா.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திரு. எம்.மகேஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | பாஸ்கரன் | த/பெ.: | ரெத்தினசாமி |
| கிராமம்: | திருச்சி | தாலுக்கா: | திருவெறும்பூர் |
| மதம்: | இந்து | தொழில்: | HAPP தொழிற்சாலை மாஸ்டர் ட்ராப் மேன் (பணி ஓய்வு) |
| வயது: | 62 | முகவரி: | திருச்சி |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 26.02.2026.

**முதல் விசாரணை :–**

நான் அசல் வழக்கின் வாதி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளளேன். அதில் உள்ள விவரம் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். நான் சொல்லிதான் தயார் செய்யப்பட்டது. 22.06.2001–ல் சந்தானம் முதலியார் அவர்கள் வாதிக்கு எழுதிக்கொடுத்த கிரய ஆவணம் அசல் **வா.சா.ஆ.1** ஆகும். 25.11.2024–ல் வாதி திருத்துறைப்பூண்டி வட்டாச்சியர் அவர்களிடம் அளித்த மனுவின் அலுவலக நகல் **வா.சா.ஆ.2** ஆகும். 18.12.2024–ல் திருத்துறைப்பூண்டி நிலஅளவையருக்கு வட்டாச்சியரால் அனுப்பட்ட கடிதம் அலுவலக நகல் **வா.சா.ஆ.3** ஆகும். 12.02.2025–ல் பிரதிவாதிகளுக்கு அனுப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.4** ஆகும். பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு சார்வு செய்யப்பட்டதற்கான

ஒப்பதல் அட்டை ரசீது நகல் தாக்கல் செய்கிறேன். 04.04.2025–ல் 3ம் பிரதிவாதியால் அனுப்பபட்ட பதிலறிவிப்பு நகல் தாக்கல் செய்கிறேன். 14.05.2025–ல் 1ம் பிரதிவாதி வாதிக்கு அனுப்பிய பதிலறிவிப்பு நகல் தாக்கல் செய்கிறேன். 29.05.2025–ல் வாதி வழக்கறிஞர் அனுப்பபட்ட மறுப்பு அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.5** ஆகும்.தாவாப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

<u>**4ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை;–**</u>

கடந்த 22.06.2001– ம் வருடம் ஏற்படுத்தப்பட்ட ஆவணம் எண்.767/2001 இந்த ஆவணத்தில் கண்ட சொத்திற்கான புல எண் என்பது 209/23 என பதிவு செய்துள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்தின் உண்மையான புல எண்.211/1பி2 என்றால் சரிதான். நான் தாவா சொத்தை கிரயம் வாங்குவதற்கு முன்பாக கிரய ஒப்பந்த பத்திரம் ஏதேனும் ஏற்படுத்தி கொடுத்துள்ளேனா என்றால் தாவா சொத்து என் மாமனாருக்கு சொந்தமான சொத்து என்பதால் அக்ரிமெண்ட் எதும் போடவில்லை. சொத்து விவரத்தை தவறாக குறிப்பிட்டு ஆவணம் ஏற்படுத்தி கொண்டதில் உண்மையான புல எண்.211/1பி2 என்பதை காட்டக்கூடிய ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். கிரய பத்திரம் ஏற்படுத்தி அதில் பிழைகள் இருந்தால் கிரய ஆவணம் ஏற்படுத்திக்கொடுத்த சம்பந்தப்பட்ட நபரோ அல்லது அவர் இறந்து போனால் அவரது வாரிசுகள் பிழை திருத்தம் பத்திரம் 4ம் பிரதிவாதி அலுவலகத்தில்

எழுதிக்கொடுத்தால் தான் பிழை திருத்தம் செய்ய முடியும் என்றால் சரிதான். ஆனால் 1 முதல் 3 பிரதிவாதிகள் தவறாக உள்ள புல எண்ணை திருத்தம் பத்திரம் எழுதிக்கொடுக்க வர மறுத்துள்ளார்கள். நான் பிழை திருத்த பத்திரம் 4ம் பிரதிவாதி அலுவலகத்தில் தாக்கல் செய்யாமல் இந்த வழக்கை தாக்கல் செய்யமுடியாது என்று சொன்னால் சரியல்ல. நான் முறையாக இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றும், அதானல் அசல் வழக்கு தள்ளுப்படி செய்யகூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை :– இல்லை**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.